**நாள் 08.08.2024**

OS No. 69/2020

**பி.வா.சா.2, திரு. பீர் இஸ்மாயில்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவரும் எனது மகள்கள். நிரூபண வாக்குமூலத்துடன் நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் நான் தயார் செய்தது ஆகும். வரைபடத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 27.04.2001 ஆம் தேதி எனது மனைவிக்கு நான் எழுதிக் கொடுத்த ஆவணம் நன்கொடை ஆவணம். நான் எழுதிக் கொடுத்த பின்னர் எனது மனைவி அவரது இஷ்டம் போல் இடத்தை அனுபவிக்க தான் நான் எழுதிக் கொடுத்தேன். நீங்கள் உங்கள் மனைவிக்கு எழுதிக் கொடுத்த இடத்தின் மொத்த சொத்திற்கும் வடக்கு பக்கம் MK தெரு (மீ.கா தெரு) உள்ளது என்றால் சரிதான். வீட்டு வாசல் எந்த தெருவில் உள்ளதோ அந்த தெருவின் பெயரை போட்டு தான் வீட்டு வரி ரசீது வழங்குவார்கள் என்றால் ஆமாம்.

2. இப்போது நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண்.79/1 ஆகும். மேற்படி கதவு எண் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2001 ஆம் ஆண்டு போல் இருக்கும். வா.சா.ஆ.4 வீட்டு வரி ரசீதில் கதவு எண். 79 என்றும், திரு.வி.க. தெரு என்றும், செலுத்துவோரின் பெயர் ஹபீப் நிஷா என்றும்

உள்ளது என்றால் ஆமாம். அது ஆரம்பத்தில் பிரித்துக் கொடுப்பதற்கு முன்பு போடப்பட்ட ரசீது. நீங்கள் நிரூபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் இரண்டு கோடுகள் பென்சிலால் போட்டுள்ளது வீட்டு வாசலை குறிக்கிறதா என்றால் ஆமாம். மேற்படி வரைபடத்தில் 2008 ஆம் ஆண்டுக்கு முன்பு என குறிப்பிட்டுள்ள வரைபடத்தில் வீடு இரண்டு வாசலானது மீ.கா தெருவில் உள்ளது. அந்த தெருவில் இருந்து வீடு இரண்டின் வாசல் வழியாக முற்றத்திற்கு சென்று தான் வீடு ஒன்றுக்கு வாசல் உள்ளது என்றால் ஆமாம்.

3. நிரூபண வாக்குமூலத்தில் வீடு ஒன்று மற்றும் கடை ஒன்று பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள், அந்த அடிப்படையில் தான் இந்த வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். உங்கள் மனைவி வீடு ஒன்று மற்றும் கடை ஒன்று, முற்றம் ஆகியவற்றை வாதிக்கும், வீடு இரண்டு மற்றும் கடை இரண்டு ஆகியவற்றை பிரதிவாதிக்கும் எழுதிக் கொடுத்தார் என்றால் ஆமாம். வரைபடத்தில் உள்ள 2008 ஆம் ஆண்டுக்கு முன்பு மற்றும் 2008 ஆம் ஆண்டு ஆகிய இரண்டு படத்திலும் வீடு ஒன்றிற்கான வாசல் ஒரு வாசல் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2008 ஆம் ஆண்டு வீடு ஒன்றில் இருந்து ஆள் வெளியே வர வேண்டுமானால் எப்படி வர முடியும் என்றால் முற்றம் வந்து, வீடு இரண்டின் வழியாகத்தான் வெளியே வர

முடியும். வேறு வழி கிடையாது.

4. கடந்த 2020 ஆம் ஆண்டு வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே வீடு கட்டுவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். நீங்கள் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றீர்களா என்றால் சென்றேன். நான் எனது மனைவிக்கு எழுதிக் கொடுத்த இடத்திலிருந்து எனது மனைவி பிரதிவாதிக்கு 4.33 சென்ட் இடம் எழுதிக் கொடுத்துள்ளார். மீதம் 2.89 சென்ட் அளவுள்ள இடத்தில் வாதிக்கு எவ்வளவு இடம் எழுதிக் கொடுத்தார் என்றால் 2.89 சென்ட் இடத்தில் பாதி இடம் வாதிக்கும், பாதி இடம் பிரதிவாதிக்கும் எழுதிக் கொடுத்தார். அவ்வாறு எழுதிக் கொடுத்த போது பொதுப் பாதையாக இடம் எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் எனது மனைவி வாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் ஆகும். அதில் சொத்து விவரம் எண்.3 இல் பொது நடைபாதையில் மட்டும் வாதிக்கு பாதி பாத்தியம் உள்ளதாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. தவறுதலாக எழுதப்பட்டுள்ளது என அந்த ஆவணத்தை ரத்து செய்ய உங்கள் மனைவி நடவடிக்கை எடுத்தாரா என்றால் நடவடிக்கை எடுத்தார். ஆனால், அக்கா, தங்கை தான் என்பதால் அனுசரித்து செல்வதாக கூறி விட்டுவிட்டார். தங்கை என்பதால் சமரசமாக செல்ல சொல்லிவிட்டு வழக்கு அல்லது மனு எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் ஆமாம்.

5. உங்கள் மனைவி நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான் வாதிக்கு பொது நடைபாதை விட்டுக் கொடுத்துள்ளார் என்றும், ஆனால், நீங்கள் தற்போது உங்கள் மகளான பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கூறியுள்ளது போல் இரண்டு மகளுக்கும் சரி சமமாக பார்ப்பதாக இருந்தால் மொத்தம் உள்ள 7.5 சென்ட் (ஏழு புள்ளி ஐந்து சென்ட்) இடத்தில் இரண்டு மகள்களுக்கும் தலா 3.75 சென்ட் (மூன்று புள்ளி ஏழு ஐந்து சென்ட்) அளவுள்ள இடம் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனக்கு கொஞ்சம் கடன் இருந்ததால், அதனை கொடுத்து பணம் வாங்கி விட்டேன். ஆனால், நன்கொடையாக எழுதிக் கொடுத்தேன். பிரதிவாதியின் கணவர் கேரளாவில் ஹோட்டல் வேலை செய்கிறார். 2008 ஆம் ஆண்டும் ஹோட்டல் வைத்திருந்தார். அவருக்கு தினசரி சம்பளம் எவ்வளவு என்றால், அவருக்கு சம்பளம் கிடையாது. அவரது சொந்த ஹோட்டல் ஆகும். மாதம் ரூ.50,000/-ம் சம்பாதிப்பார். மொத்தம் உள்ள 7.5 சென்ட் (ஏழு புள்ளி ஐந்து சென்ட்) இடத்தில் ¾ (முக்கால்) பகுதியை உங்கள் மனைவியை கட்டாயப்படுத்தி பிரதிவாதியான இளைய மகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளீர்கள் என்றும், மூத்த மகளான வாதிக்கு வெறும் ¼ (கால்) பகுதியை மட்டும் எழுதி கொடுத்துள்ளீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் 2008 ஆம் ஆண்டு எனது மனைவிக்கு கொடுத்து விட்டேன். அப்போது கடன் இருந்தது. அதன் பின்பு 2010 ஆம் ஆண்டுதான் மகள்களுக்கு பிரித்துக் கொடுத்தேன்.

6. ஆவணத்தில் பொதுப்பாதை எனக் காட்டப்பட்டுள்ள இடத்தில் தற்போது என்ன உள்ளது என்றால் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். மகள்களுக்கும் சரிசமமாக இடத்தை பிரித்துக் கொடுக்காததால் தான் உங்கள் மனைவி வாதி அவருடைய வீட்டிற்கு சென்று வருவதற்காக பிரதிவாதி தற்போது வீடு கட்டியுள்ள இடத்தில் பொது பாதையாக கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பொதுபாதையை விடாமல் கட்டியதால் தான் வாதி வேறு வழி இல்லாமல் அவருக்குரிய கடையை இடித்து பாதையை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அது வீட்டில் பெரிய மனிதர்களை வைத்து பேசி அதற்கு சம்மதித்து தான் வாதி பாதையை ஏற்படுத்தினார். எந்த தேதியில் பெரியோர்களை வைத்து பேசினீர்கள் என்றால் 2010 ஆம் ஆண்டில் எழுதிக் கொடுக்கும் போது பேசினோம். யாரையெல்லாம் வைத்து பேசினீர்கள் என்றால் குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் ஜபருல்லாகான் என்பவரை வைத்து பேசினோம். மகள்களும், அவர்களுடைய கணவர்களும் கலந்து கொண்டார்களா என்றால் ஆமாம். அவர்களை வைத்து தான் பேசினோம். உங்களுக்கு பிரதிவாதியின் மீது

**தான் பாசம் அதிகம் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.08.13 10:55:38 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai